INDIAN JOURNAL OF TAMIL | Volume 1 | Issue 4

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

RESEARCH ARTICLE

# தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்-மதிப்பீட்டாய்வு

**மு. கயல்விழி** [அ]

[அ] தமிழ்த்துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்-631502, தமிழ்நாடு, இந்தியா.

# History of Tamil Nadu People and Culture-A Review

**M. Kayalvizhy** [a, *]

[a] Department of Tamil, Pachayyappas College for Women, Kancheepuram - 631502, Tamil Nadu, India.
*Corresponding Author Email: kayalarul22@gmail.com
(Received: 07th August 2020; Accepted: 19th November 2020)
DOI: http://doi.org/10.34256/ijot2042

**Abstract:** Tamil Nadu have an ancient history. But this history has not been fully revealed. Lack of evidences, unauthorised source materials where the setback for that. But K.K.Pillai's "History of Tamil Nadu People and Culture" book has been considered as a valuable and authentic work in Tamil Nadu history. This book follows scientific method of research writings. In this book K.K. Pillai try to give full history of Tamil people from pre historic period to modern times. It also proved that Tamil people have an ancient glory and heritage. The author also rejected some false ideas about Tamils past. K.K. Pillai's this work prevailed as an authentic and reliable work in the history of Tamil Nadu.

**Key Words:** Tamil Nadu History, Authentic work, False ideas, Proved the past.

## ஆசிரியர் குறிப்பு



**திருமதி மு.கயல்வழி** எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., செட் பயின்றுள்ளார். 10 ஆண்டுகளுக்கும் மேலாய் பல்வேறு நிலைகளில் கல்விப்பணி ஆற்றியுள்ளார். 5 ஆய்வுக் கட்டுரைகளை பன்னாட்டு ஆய்விதழ்களில் வெளியிட்டுள்ளார். தொடர்ந்து பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவருகின்றார். தமிழரின் பழமை மற்றும் பெருமைகளை வெளிப்படுத்துவதே இவரின் ஆய்வின் முதன்மை நோக்கமாகும். தற்பொழுது புகழ்பெற்ற காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரியின் தமிழ்த் துறையில் உதவிப் பேராசிரியராக பணிபுரிந்து வருகின்றார்.

## முன்னுரை

உலகில் மனிதன் முதன் முதலாய்த் தோன்றிய இடங்களில் தமிழகமும் ஒன்று. எனவே, இது பழம் சிறப்பு வாய்ந்தது. எத்தனையோ குடிமரபுகளும், ஆட்சியாளர்களும் தமிழ் நாட்டை ஆட்சி செய்துவிட்டுச் சென்றுள்ளனர். ஆனால் அவ்வரலாறுகளை எல்லாம் இன்று வரை முழுமையாய் அறியக்கூடவில்லை. நடந்து முடிந்த நிகழ்வுகளை

முறையாகப் பதிவு செய்து அதை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்க வேண்டுமென்ற உணர்வு நம் முன்னோர்களிடம் இல்லை. மேலும் பழந்தமிழர் வரலாற்றைச் சங்கக் காலம் தொடங்கி மட்டுமே அறிய முடிகின்றது. அதற்குமுன் பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த நம் முன்னோர் பற்றி ஒன்றும் அறிவதற்கில்லை. சங்கக் காலம் பற்றிக் கூட இலக்கியங்களைக் கொண்டு தான் அறிய முடிகின்றது. மேல் நாடுகளில் கால வரன்முறை (Chronology) என்ற ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்புகளைப் பதிவு செய்துவிட்டுச் சென்றுள்ளனர். எனவே, அதன் துணையுடன் அங்கு எளிதில் வரலாற்றைப் படைக்கின்றனர்.

இது போன்ற வசதி நமக்கு இன்மையால் பழம் பெருமை மிக்க தமிழரின் வரலாற்றை முழுமையாகப் படைக்க இயலவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாய் வரலாற்றை எழுதிவிட்டுச் சென்றனரேயன்றி, முழுமையான நம்பத் தகுந்த தமிழர் வரலாறு நெடுங்காலம் படைக்கப்படாமலிருந்தது. இக்குறையைப் போக்க எழுந்த நூலே டாக்டர்.கே.கே.பிள்ளை அவர்கள் எழுதிய “தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும்” என்ற நூலாகும். தன் காலம் வரை கிடைத்த அத்தனை ஆதாரங்களையும் தொகுத்து முதன் முறையாக விஞ்ஞானப் பூர்வமான வரலாற்றை அவர் படைத்தார். இதற்கு முன்னும் பின்னும் எத்தனையோ நூல்கள் தோன்றினாலும் ஒன்றுகூட இந்நூலுக்கு இணையாகவில்லை. தமிழக வரலாற்றைப் படைக்கும் மிகவும் சவாலான, சிக்கலான பணியை மிகவும் திறமையுடன் கையாண்டு சிறப்பு மிகு இந்நூலைத் தமிழ்க் கூறு நல்லுலகிற்குப் படைத்தளித்தார்.

## பேராசிரியரின் வாழ்வும் பணியும்

கோலப்ப கனகசபாபதிப் பிள்ளை என்ற திரு.கே.கே.பிள்ளை அவர்கள் நாஞ்சில் நாட்டிலுள்ள கன்னியாகுமரியின் ஆளூரில் கி.பி. 1905 இல் பிறந்தார். கோட்டூரில் உயர்நிலை பள்ளி படிப்பையும், நாகர்கோவிலில் உள்ள ஸ்காட் கல்லூரியில் (Scots College) பட்டப் படிப்பையும் முடித்தார். இதன் பின் கும்பகோணம் அரசுக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். உலகப் புகழ் பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் (Oxford University) டாக்டர் பட்டமும், டி.லிட் பட்டமும் பெற்றார். புகழ் பெற்ற மாநிலக் கல்லூரியிலும், அதன்பின் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் வரலாற்று துறை பேராசிரியராகப் பணிபுரிந்தார். கி.பி.1954 முதல் கி.பி.1971 வரை சென்னைப் பல்கலைக் கழகத்தில் சிறப்பாகப் பணியாற்றிப் பல ஆய்வு நூல்களைப் படைத்தார். கி.பி.1972 முதல் கி.பி.1978 வரை யுனஸ்கோ திட்டத்தின் கீழ் இயங்கிய கீழ்நாட்டு கலாச்சார மையத்தின் இயக்குநராகப் பணிபுரிந்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் இவர் வெளியிட்ட நூல்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன. தமிழ் நாட்டின் பழமையையும், பெருமையையும் வெளிப்படுத்துவதே தன் வாழ்வின் நோக்கமாகக் கொண்டு செயல்பட்டார். மேல் நாட்டில் உள்ளது போன்ற விஞ்ஞானப் பூர்வமான ஆய்வு முறைகளைக் கையாண்டு நூல்களைப் படைத்தார். அன்னார் கி.பி.1981 இல் தம் 76 ஆம் வயதில் மறைந்தார். இவர் படைத்த நூல்கள்:-

1. சென்னை மாகாணத்தில் தலச் சுய ஆட்சி (1948)
2. சுசீந்திரம் கோயில் (1953)
3. தென்னிந்தியாவில் உயர் கல்வி வளர்ச்சி (1857-1957)
4. தென்னிந்தியாவும், இலங்கையும் (1963)
5. தமிழ் பத்திரிக்கைகளின் வளர்ச்சி (1967)
6. தமிழர்களின் சமுதாய வரலாறு (1969)
7. தமிழ்நாட்டில் ஜாதிமுறை (1973)
8. நாஞ்சில் நாட்டின் தொடக்கக் கால வரலாறு (1975)
9. தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும் (1972)
10. தமிழரின் வரலாற்று மரபுகள் (1979)
11. இந்தியாவின் வரலாறு-சிறப்பாக தமிழ்நாடு (1979)
12. சோழர் வரலாறு (1979)

## நூலமைப்பு

தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும் என்ற நூல் தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனத்தால் 1972 இல் முதன் முதலாக வெளியிடப் பட்டது. அதன்பின் 1981 இல் மறுபதிப்பு பெற்றது. பலகாலம் பதிப்பு பெறாமல் 2013 இல் செம்பதிப்பாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. இந்நூல் தொல் பழங்காலம் தொடங்கி 20 ஆம் நூற்றாண்டு வரை தமிழக வரலாற்றை உரைக்கின்றது. இது மொத்தம் 20 அத்தியாயங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இந்நூலுக்கு வலிமை சேர்க்க 23 ஒளி விளக்கப் படங்களும், 7 நாட்டு விளக்கப் படங்களும் இணைப்பாக இணைக்கப் பட்டுள்ளன. தற்போதைய பதிப்பில் முன்னுரை பின்னிணைப்பு நீங்கலாக இந்நூல் 550 பக்கங்களைக் கொண்டுள்ளது. மேற்கோள் நூற்பட்டியல் ஆங்கிலத்திலும், தமிழிலும் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பொதுவாக வரலாற்று நூல்களில் காணப்படும் பகுப்புகளான பண்டைய காலம், இடைக்காலம், தற்காலம் என்ற பிரிவுகள் இந்நூலில் காணப்படாமல் தொடர்ச்சியாக இம்மூன்று காலத்துத் தமிழக வரலாறும் இடையின்றி எழுதப்பட்டுள்ளது.

## நூலின் சிறப்புகள்

இந்நூல் முதன் முதலில் பி.ஏ. மற்றும் எம்.ஏ. படிக்கும் மாணவர்களுக்காக எழுதப்பட்டது என்றாலும் அனைத்துத் தமிழ் ஆர்வலர்களும் படித்து இன்புறத்தக்க அளவு இந்நூல் அமைந்திருப்பது இதன் சிறப்பு. தொல் பழங்காலம் தொட்டுக் கி.பி.1981 வரை தமிழக வரலாற்றையும், பண்பாட்டையும் இந்நூல் செப்புகின்றது. ஒரு முழுமையான தமிழர் வரலாறு இதுவரை படைக்கப்படவில்லை என்ற குறையை இந்நூல் போக்கிற்று. இதையே முன்னுரையில் இந்நூலாசிரியர்,

“பண்டைய காலம் தொட்டு இன்றுவரை முழுமையான தமிழக வரலாறு ஒன்று தமிழ் மொழியில் வெளிவருவது இதுதான் முதல்முறையாகும்”. (பிள்ளை.கே.கே.2013,ப:1) (Pillai, KK., 2013)

என்றும்,

“முழுநூல் வடிவத்தில் தமிழக வரலாறு என்று இது வரையில் வெளிவரவில்லை. அக்குறையை இந்நூல் தீர்த்து வைக்கும் என்பது என் நம்பிக்கை.” (பிள்ளை.கே.கே.2013,ப:1) என்று குறிப்பிட்டுள்ளார் (Pillai, KK., 2013). இந்நூல் தமிழரின் வரலாற்றை விவரிப்பதுடன் அவர்தம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்கி உரைக்கின்றது. சங்கக் காலத் தமிழரின் வாழ்வு பற்றி அதிக முக்கியத்துவம் நல்கி இந்நூல் படைக்கப்பட்டுள்ளது. இடைக்காலத் தமிழகத்தில் கிடைக்கும் தொல்லியல் சான்றுகளைக் கண் மூடித்தனமாய் நம்பாமல், அது சார்ந்த இலக்கிய ஆதாரங்களை ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது.

பிற்காலத் தமிழக வரலாறு மிகுந்த குழப்பம் நிறைந்தது. கிடைக்கும் சான்றுகள் பெரும்பாலும் ஐரோப்பியர் குறிப்புகளேயாகும். அவை ஒருதலைச் சார்பாக அமைந்துள்ளதால் அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் அதன் உண்மை தன்மையை ஆராய்ந்து ஏற்றுக் கொண்டு இந்நூல் படைக்கப் பட்டுள்ளது. தமிழகம் இந்தியாவின் ஒரு பகுதி என்பதால் அவற்றின் வரலாற்றைத் தனித்துப் பிரித்தெழுத இயலாது. எனவே கூடுமான வரை அவற்றைப் பிரித்துத் தனியாகத் தமிழக வரலாறாக எழுதும் முயற்சி இந்நூலில் காணக்கிடைக்கின்றது. தமிழகத்தில் சுதந்திரத்திற்குப் பின் தோன்றிய கட்சி ஆட்சி முறை மிகவும் சிக்கலானது என்பதால் அவற்றை மேம்போக்காகக் கூறிச் சென்றுள்ளது. எனவே பண்டைய தமிழர் வரலாற்றை மிகவும் விரிவாகவும், இடைக்கால வரலாற்றைத் தேவையான அளவும், பிற்கால வரலாற்றைச் சுருக்கமாகவும் இந்நூல் எடுத்தியம்புகின்றது. தமிழக வரலாற்றின் எப்பகுதியும் விடுபடாமல் காய்தல் உவத்தலகற்றி ஆய்வு நோக்கில் செய்திகளைத் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்தியம்புவது இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

## நூலாய்வின் சிறப்பு

இந்நூல் முழுவதும் அனைத்து விதமான தொல்லியல் சான்றுகளையும் இலக்கிய ஆதாரங்களையும் பயன்படுத்தி உள்ளது. இந்நூலின் முதல் அத்தியாயம் அடிப்படைச் சான்றுகளை ஆராய்கின்றது. வரலாற்று காலத்திற்கு முந்தைய தமிழக வரலாற்றின் பெருமையை இந்நூல் விரிவாகப் பேசுகின்றது. தமிழர், தொன்மை வாய்ந்த குடியினர் என்பது சான்றுகளுடன் நிருபிக்கப்பட்டுள்ளது. சிந்து வெளி மக்கள் தமிழருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்ற கருத்தும் இந்நூலில் நிறுவப் படுகின்றது. பழந்தமிழர்களின் அயல் நாட்டுத் தொடர்புகளும் கடல் கடந்து எவ்வாறு அவர்கள் வெற்றி கண்டனர் என்பதையும் எகிப்து, ரோம், கிரேக்கம் போன்ற மேல் நாடுகளுடனும் சீனா, மலேசியா, ஜாவா, கிழக்கு போர்னியோ போன்ற கீழை நாடுகளுடன் கொண்ட தொடர்பையும் ஆராய்ந்து விரிவாக வெளிப்படுத்தப்படுகின்றது. தமிழ் வளர்த்த சங்கங்கள் மூன்று இருந்தன என்பது உறுதிப்படுத்தப் படுவதனுடன், முதற் சங்கத்தின் காலம் கி.மு. 4 முதல் கி.மு.2 ஆம் நூற்றாண்டு என்றும், இடைச் சங்கத்தின் காலம் கி.பி. 1 முதல் 2 ஆம் நூற்றாண்டு வரை என்றும், கடைச் சங்கத்தின் காலம் கி.பி. 3 மற்றும் 4 ஆம் நூற்றாண்டு வரை என்றும் நிறுவப்பட்டு, இதற்குத் தெளிவான முடிவு காணப்பட்டுள்ளது.

தமிழரின் பழமையையும் பெருமையையும் சிறப்பையும் குறைத்து மதிப்பிட்ட பல

ஆய்வாளர்களின் கருத்துகள் உரிய சான்றுகளுடன் மறுக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களின் காலம் மிகவும் பிற்பட்டது என்ற திரு வையாபுரி பிள்ளை, (பிள்ளை.கே.கே.2013,ப:93) மற்றும் இளங்குனம் குஞ்ஞன் பிள்ளையின் கருத்தும் கருத்தைத் தவறென்று தக்க சான்றுகளுடன் மறுக்கிறார் நூலாசிரியர். (பிள்ளை.கே.கே.2013,ப:81) முதல் தமிழ் நூலான தொல்காப்பியத்தின் காலம் சாலவும் பிற்பட்டதென்று என்று கருதிய கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, திரு வையாபுரிப் பிள்ளை, டாக்டர் சிவராஜப் பிள்ளை போன்றோரின் கருத்துகள் உரிய ஆதாரங்களுடன் நிராகரிக்கப்படுகிறது. (பிள்ளை.கே.கே.2013,ப:106) தொல்காப்பியத்தின் காலம் ஏசுக் கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது என்றும் நிறுவப்படுகின்றது (Pillai, KK., 2013).

நாலடியார் போன்ற சங்கம் மருவிய நூல்களின் காலம் கி.பி 7ஆம் நூற்றாண்டு என்று கருதிய திரு.தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் கருத்தும் தவறென்று நிருபிக்கப்பட்டு, இதன் காலம் கி.பி.4 மற்றும் 5ஆம் நூற்றாண்டு என்று உறுதி செய்யப்படுகின்றது. (பிள்ளை.கே.கே.2013,ப:105) சிலப்பதிகாரம் பொய் புரட்டென்று கூறிய திரு.K.A. நீலகண்ட சாஸ்திரி மற்றும் திரு. வையாபுரி பிள்ளையின் கருத்தும் உரிய சான்றுகளுடன் நிராகரிக்கப்படுகின்றது. (பிள்ளை.கே.கே.2013,ப:117) சிலப்பதிகாரத்தின் காலத்தைக் கோள்கள் நிலைப்படி கணித்து மிகவும் பிற்பட்டது என்றுரைத்த திரு. எல்.டி. சாமிக்கண்ணு பிள்ளையின் கருத்துகள் தவறென்று நிருபித்ததுடன், கோள்கள் கொண்டு காலம் கணிப்பது விஞ்ஞான ஆய்வுக்குப் பொருந்தாதது எனவும் சுட்டப்படுகின்றது. (பிள்ளை.கே.கே.2013,ப:121) காஞ்சிப் பல்லவர்களின் தோற்றம் புதிராக இருந்த நிலையில் பல விதச் சான்றுகளைக் கொண்டு அவர்கள் வடநாட்டிலிருந்து போந்தவர்கள் என்பதும், சாதவாகனர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்றும் தக்க ஆதாரங்களுடன் உறுதிபடுத்தப் பட்டுள்ளது (பிள்ளை.கே.கே.2013,ப:192) (Pillai, KK., 2013).

முடியுடை வேந்தர் மூவரின் ஆட்சிச் சிறப்புகளையும் இந்நூல் விரிவாக எடுத்துரைக்கின்றது. இடைக்காலச் சேர, சோழ, பாண்டியர்களின் வரலாற்றை உரிய ஆதாரங்களுடன் விரிவாக எடுத்துரைக்கின்றது. பிற்காலத் தமிழக வரலாற்றை நுணுகி ஆராய்ந்து செல்லாமல் மேம்போக்காகச் செல்லிச் செல்கின்றது. தான் வரைந்த வரலாறு நூலுக்கு அடிப்படையாகக் கீழ்க்கண்ட தொல்லியல் சான்றுகளைத் தான் பயன்படுத்தியதாகத் திரு. பிள்ளை அவர்கள் பட்டியலிட்டுள்ளார்:-

1.பாண்டியர் செப்பேடுகள்

2.பல்லவர் செப்பேடுகள்

3.சோழர் செப்பேடுகள்

4.Epigraphica Indica

5.Epigraphica Carnatica

6.South Indian Inscriptions

7.Annual Report on Indian Epigraphy

8.Pudukkottai State Inscriptions

9.South Indian Temple Inscriptions

10.Trivancore Archaeological Series

இது தவிரத் திரு.எஸ்.கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், திரு.வி.ஆர் இராமச்சந்திர தீட்சிதர், திரு. டி.வி.மாகாலிங்கம், திருமதி.சி.மீனாட்சி, திரு.கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, திரு.மா.இராஜமாணிக்கம் பிள்ளை. திரு.தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், திரு.பி.டி. சீனிவாச ஐயங்கார், திரு.எஸ். வையாபுரிப் பிள்ளை, திரு. எல்.டி. சாமிக்கண்ணு பிள்ளை, டாக்டர்.சிவராஜப் பிள்ளை, இளங்குனம் குஞ்ஞன் பிள்ளை போன்ற அறிஞர்களின் நூல்கள் ஏற்கப்பட்டும், மறுக்கப்பட்டும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இந்நூல் வெறும் தமிழ் மன்னர்களைப் பற்றி பேசும் அரசியல் வரலாறாக இல்லாமல் தமிழர்களின் சமூகப், பொருளாதார, சமயப், பண்பாட்டு நிலைகளை எடுத்துரைக்கும் வரலாற்று சுரங்கமாகத் திரு.பிள்ளை அவர்கள் படைத்துள்ளார் (Pillai, KK., 2013; Krishnaswami Aiyangar, S., 1931; Elamkulam Kunjan Pillai, 1970; Mahalingam, T. V., 1955; Meenakshi, C., 1938; Neelakanta Sastri, K.A, 1937; Ramachandra Dikshatar, V.R., 1947; Rasamanikkam Pillai, Ma., 1944; Sathasiva Bandarathar, T.Y., 2008; Sivaraja Pillai, K.N., 1932; Srinivasa Iyengar, P.T., 1929; Swamikannu Pillai, L.D., 1911; Vaiyapuri Pillai., 1955). கால வரன்முறைப்படி ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ச்சிகள் கோவையாக விளக்கிக் கொண்டு செல்லப்படுகின்றன. முரண்பாடான தகவல்களும் கருத்துகளும் யார் உரைத்தாலும் அவர் எத்தகையவராயினும், உரிய சான்றுகளுடன் நிராகரிக்கப்படுகின்றது. நூலின் எவ்விடத்திலும் நடு நிலைமை மீறப்படவில்லை. நூல் முழுவதும் எண்ணற்ற தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் படித்தவர் முதல் பாமரர் வரை எளிதில் படித்துணரும் வண்ணம் இந்நூலின் நடை உள்ளது.

பழங்கால உண்மையை உணர்ந்து உலகிற்கு வெளிப்படுத்துவதே இதன் நோக்கமென்பதால், மாபெரும் ஆய்வாளர்கள் பலரின் கருத்துகளும் பலவிடங்களில் மறுக்கப்பட்டுத் தவறென்று சுட்டப்படுகின்றது. மேல் நாடுகளில் சுட்டப்படும் ஆய்வு நெறிமுறைகள் யாவும் இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளது இதன் கூடுதல் சிறப்பு. இனிமையான நடை, ஆழ்ந்த கருத்துகள், நுண்ணிய ஆய்வு, கோர்வையான இயல்கள், ஏராளமான சான்றுகள் போன்ற பல் சிறப்புகளை இந்நூல் கொண்டு திகழ்கின்றது. இதற்கு மாறாக இந்நூலில் ஓரிடமேனும் குறையென்பது காணக் கிடைக்கவில்லை. தமிழ் ஆராயும் ஆய்வாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும், மாணவர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் இந்நூல் துருவ நட்சத்திரமாக இன்றளவும் திகழ்ந்து வருகின்றது.

## முடிவுரை

தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும் என்ற நூல் முதன் முதலில் வரலாற்று மாணவர்களுக்காகப் படைக்கப்பட்டது. ஆனால் தமிழ் ஆர்வலர் அனைவரும் படித்தின்புறும் நூலாய் இது திகழ்ந்து வருகின்றது. தமிழகத்தில் உள்ள பெரும்பான்மையான பல்கலைக் கழகங்கள் இந்நூலைப் பாடமாக வைத்திருப்பதே இதன்

வெற்றிக்குச் சான்று. ஒரு தலைசிறந்த ஆய்வு நூலானது தக்க சான்றுகளுடன் படைக்கப்படுவதுடன், அதன் ஆய்வானது காய்தல் உவத்தலகற்றி உண்மையை வெளி கொணர்வதே முதன்மையான நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் படிப்போர்க்குச் சுவை தரும் வண்ணம் அமையவும் வேண்டும். மேற்சொன்ன அனைத்து இயல்புகளையும் தன்னகத்தே கொண்டு இந்நூல் விளங்குகின்றது. ஒரு தலைச் சிறந்த ஆய்வு நூலுக்கு இலக்கணமாக இந்நூல் திகழ்ந்து வருகின்றது. மேல்நாட்டு ஆய்வு நூல்களில் நன்கு ஊறித் திளைத்த திரு.கே.கே. பிள்ளை அவர்கள் அவ்வழியே நின்று தமிழக மக்களின் வரலாற்றை நமக்கு ஆக்கியளித்துள்ளார்கள். தமிழக வரலாற்றை அறிய விரும்பும் ஆர்வலருக்கும், புதிய நூல் படைக்க விரும்பும் ஆய்வாளர்களுக்கும், உண்மையை அறிய முயலும் ஆசிரியர்களுக்கும், பழமையை அறிய விழையும் மாணவர்களுக்கும் இந்நூல் இன்று வரை கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து வழிகாட்டி வருகின்றது.

## References


Krishnaswami Aiyangar, S., (1931) Hindu Administrative Institutions in South India, University of Madras, Chennai, Tamil Nadu, India.

Elamkulam Kunjan Pillai, (1970) Studies in Kerala History, National Book Stall, Kottayam, India.

Mahalingam, T. V., (1955) South Indian Polity, University of Madras, Chennai, Tamil Nadu, India.

Meenakshi, C, (1938) Administration and Social Life Under The Pallavas, University of Madras, Chennai, Tamil Nadu, India.

Neelakanta Sastri, K.A, (1937) The Colas, University of Madras, Chennai, Tamil Nadu, India.

Pillai, KK., (2013) History of Tamil Nadu People and Culture, International Insitute of Tamil Studies, Chennai, India.

Ramachandra Dikshatar, V.R., (1947) Origin and Spread of The Tamils, The Adyar Library, Chennai, Tamil Nadu, India.

Rasamanikkam Pillai, Ma., (1944) History of the Pallavas, Tirunelveli Saivasittantha Publishing House, Tirunelveli, India.

Sathasiva Bandarathar, T.Y., (2008) Post-Chola History, Annamalai University, Chidambaram, Tamil Nadu, India.

Sivaraja Pillai, K.N., (1932) The Chronology of The Early Tamils, University of Madras, Chennai, Tamil Nadu, India.

Srinivasa Iyengar, P.T., (1929), History of The Tamils- From The Earliest Times To 600 A.D, C.Coomaraswamy Naidu & Sons, Chennai, Tamil Nadu, India.

Swamikannu Pillai, L.D., (1911) Indian chronology, Premier Press, Chennai, Tamil Nadu, India.

Vaiyapuri Pillai., (1955) Literary Light, Paari Station, Chennai, India.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License